Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

# இலக்கியம் காட்டும் நாடகம்

12

மு.கோகிலா தேவி,
கௌரவ விரிவுரையாளர்
அரசு கலைக்கல்லூரி, பரமக்குடி

**ஆய்வுச் சுருக்கம்**

தமிழ் நாடக வரலாறு - தொல்காப்பியர் காலத்தில் நாடகம்- சிலம்பு காட்டும் நாடகம் -நாடக அழிவும் தோற்றமும்-பல்லவர் கால நாடகங்கள் -மேடை நாடகம் -குறவஞ்சி நாடகம் -மனோன்மணியம் சுந்தரம் பிள்ளையின் நாடகம் -சங்கரதாஸ் சுவாமியின் நாடகத் தன்மை -பம்மல் சம்பந்த முதலியார் நாடக பங்கு - பரிதிமாற் கலைஞரின் நாடகத் தன்மைகள்

**முன்னுரை**

இலக்கியம் என்பது இலக்கை இயம்புவதாகும். சமுதாய வாழ்வின் பிரதிபலிப்பாக அமைவது. ஓர் இலக்கியம் தான் தோன்றிய சமுதாயத்தின் நாகரிகம், பண்பாடு, அரசியல், சமயநிலை முதலானவற்றை நேரடியாகவோ, மறைமுகமாகவோ உணர்த்தி நிற்க்கும். மக்களின் உயர்வுக்கு ஊக்கம் அளிப்பது கலை. இலக்கியம் என்பது காலக்கண்ணாடி, சுவை குன்றாத எழுத்து பெட்டகம், தலைமுறை, தலைமுறையாக கடத்தப் படவேண்டிய நினைவு களஞ்சியம், ஒர் உயர்ந்த இலக்குடன் எழுதப்படுவது தான் இலக்கியம். அந்த வகையில் "யாதும் ஊரே யாவரும் கேளிர்" போன்ற பாடல்கள் வாழ்வை நெறிப்படுத்தும் வாழ்வியல் அறங்களை எடுத்துக் கூறுவது தான் இலக்கியம்.

நாடு+அகம்=நாடகம் நாடுதலாவது விரும்புதல்; அகமாவது மனம். எனவே நாடகமாவது மனத்தினால் விரும்பப்படுகிறது அல்லது மனத்தை கவர்வது என்று பொருள்படும்.பிற கலைகளைக் காட்டிலும், காண்பாரை பெரிதும் கவர்வது நாடகக் கலையாதலின் அது பெருவிருப்பிற்குரியதாயிற்று. எனவே நாடகம் கலைகளின் அரசி எனப் போற்றப்படுகிறது.கிரேக்க எகிப்தியத் தெய்வங்களின் விழாக்கள் இருந்துதான் நாடகம் பிறந்தது என்பார் மேனாட்டார். இயலிசையால் காதுக்கும், கூத்தால் கண்ணுக்கும், இன்பம் பயக்கும். இக்கலையினைக் கலைக்கரசு, நாகரித்திற்குக் கண்ணாடி, பாமரமக்களின் பல்கழைக்கழகம் என்கிறார் டி.கே.சண்முகம்.

இத்தகைய அரிய கலையை தமிழ்க்கே உரிய கலை அன்று. ஆரியரோடு கலந்த பின்னரே தமிழர்களிடத்தில் நாடகத்தமிழ் உண்டாயிருத்தல் வேண்டும் என்கின்றனர். நாடகம் என்ற சொல் வடசொல்லாம். இதற்குப் பரிதிமாற்கலைஞரே மறுப்புத் தருகிறார். கூத்து என்ற சொல்லே ஆதியில் தமிழ்கள் வழங்கியது. ஆகவே நாடகம் என்ற சொல் வழக்கின் முன்னரே நாடகத்தொழில் வழக்கும், நாடகநூல் வழக்குத் தமிழர்நாட்டு உண்டென்பது பெற்றாம். பம்பல் சம்பந்த முதலியாரும் ”தமிழ்நாடகமானது தானாய்த் தமிழ் மொழியிலே உற்பத்தியானது என்பது என்திடமான கொள்கை எனக் கூறி நிறுவுகின்றார்.

**ஆய்வு அணுகுமுறை**

இவ்வாய்வு கட்டுரையானது இலக்கியத்தில் நாடகம் உள்ளதால் பல்வேறு கோணங்களில் விளக்கியும் பகுத்தும் ஆய்வதால் விளக்கமுறை, பகுப்புஆய்வு முறைகள் இதில் எடுத்தாலப்பட்டன.

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

**தமிழ் நாடக வரலாறு**

தமிழுக்கு இலக்கணம் கண்டபோதே நாடகம். நாடகத்தைத் தமிழிலிருந்து வேறுபடுத்த முடியாதபடி இயலிசை நாடகமெனுந்தமிழ் என மொழியோடு நாடகத்தையும் இணைந்திருக்கிறார்கள். ஔவைப் பிராட்டியார் பால், தேன், பாகு, பருப்பு இவை நான்கையும் நான் உனக்குத் தருகின்றேன். இயல், இசை, நாடகம் ஆகிய மூன்று தமிழையும் நீ எனக்குக் கொடு" விநாயரிடம் வேண்டுவதை,

பாலும் தெளிதேனும் பாகும் பருப்பும் இவை
நாலும் கலந்துனக்கு நான் தருவேன் - கோலஞ்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீயெனக்குச் சங்கத் தமிழ் மூன்றும் தா."

என்னும் பாடல் விளக்கும் தமிழ் என்று சொல்லும்போதே அது இயல், இசை, நாடகம் ஆகிய மூன்று கலைப்பகுதிகளையும் உள்ளடக்கி நிற்கின்றது என்பது புலனாகும் இப்படிப்பட்ட மூன்று பெரும் பிரிவுகளாக மொழியை வேறு யாரும் வகுத்ததில்லை. இது நமது தமிழ் மொழிக்கே உரிய தனிச் சிறப்பாகும்.கூத்து என்பது பற்றி திவாகரமுனிவர் சேந்தன் திவாகரத்தில்,

"நடமே நாடகம் கண்ணுள் நட்டம் படிதம் ஆடல் தாண்டவம் பரதம்
ஆலுதல் நூங்கல் வாணி குரவை
நிலயம் நிருத்தம் கூத்தெனப் படுமே" (சே.தி.9)

என்றுரைப்பர். இதில் நாடகம், நடனம், ஆடல், கூத்து நாடகம் என்ற சொற்கள் அனைத்தும் ஒருபொருட்பன்மொழியாக ஆடற்கலையையே குறித்துவந்தன என்பது புலனாகும்.

**தொல்காப்பியர் காலத்தில் நாடகம்**

தொல்காபப்பியர் " நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்" என்று குறிப்பிடுகிறார். இதில் வாடா வயவர் ஏத்தும் வள்ளிக்(கூத்தும்) என வருதலான் அக்காலத்திலேயே தமிழ்நாடகம் முன்னிலை பெற்றிருக்க வேண்டும் எனத் துணியலாம் ஆனால் அக்கால நாடகநூல் எதுவும் நமக்குக் கிடைக்கவில்லை. இக்கலைப்பற்றிய விபரங்களைத் தரும் முதல் நூலாக சிலப்பதிகாரம் விளங்குகிறது.

பாரதம், அகத்தியம், முறுவல், சயந்தம், செயிற்றியம், குணநூல், பஞ்சமரபு, பரதசேனாதிபதியம், மதிவாணர் நாடகத்தமிழ் போன்ற நாடகத்தமிழ்நூல்கள் இருந்தன. இவை தற்போது இல்லை அழிந்துவிட்டன என்பதனை அடியார்க்கு நல்லார் உரைமூலம் அறிய முடிகிறது.

**சிலம்பு காட்டும் நாடகம்**

சிலப்பதிகாரம் வாயிலாக நாடக அரங்கின் அமைப்பு நுட்பங்களும், தூண்நிழல் விழாவண்ணம் விளக்குகள் அமைத்த முறையும், இன்றுள்ள Eye Brow Pencil" போன்ற மைதீட்டும் கருவி இருந்த அருமையும், ஒருமுக எழினி, பொருமுக எழினி, கரந்துவரல் எழினிகள் :இன்னின்னார் இந்த இடத்தில் அமர வேண்டும் எனும் வரிசை முறையும் கூத்துக்களின் வகைகளும் பிறவும் நுட்பமுடன் நவிலப்பட்டுள்ளன. இதன் மூலம் அக்காலங்களில் நாடகநிலையை அறியமுடிகிறது. இக்கலை தெய்வீகக் கலையாகவும் கருதப்பட்டது.

சிலப்பதிகாரக் காலத்தில் நாடகம் கதை தழுவிய கூத்தாக இருந்திருக்க வேண்டும் என்பதை இதனால் அறிந்து கொள்ளலாம். மாதவி நாடகக் கணிகை" என்றே குறிக்கப்படுகிறார். அரங்கேற்றுகாதையில்" அவள் தம் நாடகத்திறமையை வெளிப்படுத்துவதற்காகவே படைக்கப்பெற்றுள்ளது எனலாம். ஆய்ச்சியர் குரவை" யில் "வாலசரித நாடகம்" என்று இளங்கோ

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

குறிப்பிடுவார். குரவைக் கூத்தும் நாடகம் என்றே அழைக்கப்பட்டது.

**நாடக அழிவும் தோற்றமும்**

உயர்நிலையில் உலவிய நாடகம் தமிழ்நாட்டில் மீண்டும் தன்னிலையிழந்தது களப்பிரர் ஆட்சியும், இசையும் கூத்தும் காமத்தில் ஆழ்ந்துவன என எண்ணி வெறுத்த சமணபௌத்த மதத்தாக்குதலுமே இதற்குக் காரணங்களாகும். இதனால் கி.பி.10 ஆம் நூற்றாண்டு வரை நாடகங்கள் தோன்றவில்லை.

பின்பு முதன் முதலாக "இராஜராஜவிஜயம்" எனும் நாடகம் அவன் காலத்திலேயே விஜய ராஜேந்திர ஆசிரியனால் (986-1017) நடிக்கப் பெற்றதாகத் "தஞ்சை பெரிய கோயில் கல்வெட்டு பேசுகிறது." பின்னர் குலோத்துங்க சோழ நாடகம் தோன்றிற்று 1118-ல் கமலாயபட்டர் பூம்புலியூர் நாடகம் நடித்து அரசனிடமிருந்து இறையிலி நிலம் பெற்றதாகத் தென்னார்க்காடு கல்வெட்டு தெரிவிக்கின்றது.

மீண்டும் நாடகம் 14 ஆம் நூற்றாண்டு முதல் 17 ஆம் நூற்றாண்டு வரை தோன்றவில்லை. காரணம் முகம்மதியார் படையெடுப்பு, அதனால் அங்குள்ள நாடக் அரங்குள் அழிவு போன்றவை காரணங்களாகும். 17 ஆம் நூற்றாண்டு இறுதியில் தொடங்கி சிற்றரசர்கள், வள்ளல்கள், ஆகியோரின் ஆதரவால் கூத்துநூல்கள் கிளைத்தன. இவை பெரும்பாலும் பாட்டுருவிலேயே அமைந்தன. குமரகுருபரரின் மீனாட்சியம்மைக் குறம், திரிகூடராசப்பரின் குற்றாலக் குறவஞ்சி, முக்கூடங்பள்ளு, பருளை, விநாயகப் பள்ளு, போன்றவைகள் இங்கு குறிப்பிடலாம். 17, 19 ஆம் நூற்றாண்டுகளில் நாடகம் குறவஞ்சி, பள்ளு, நொண்டி என்ற அளவில் இருந்தது. 19ஆம் நூற்றாண்டுகளில் நாடகங்கள் புத்துயிர்பெற்றது. பல்வகை நாடகங்கள் இக்காலத்தில் தோன்றின. அவற்றில் குறிப்பிடத்தக்கன.

**பல்லவர் கால நாடகங்கள்**

பல்லவர் காலத்தில் நாடகம் நடிப்பும் உரையாடலும் கலந்த ஒன்றாக வளர்ச்சியுற்றது.மகேந்திரவர்மன் என்ற பல்லவ மன்னன் கி.பி.7 ஆம் நூற்றாண்டில் "மத்த விலாசப் பிரகசனம்" என்ற நாடகத்தை எழுதினான். பிரகசனம் என்றால் நகைச்சுவை என்று பொருள். பல்லாவரம், திருச்சி, குகைக் கோயில்களில் உள்ள கல்வெட்டுகளில் இந்நாடகம் செய்தி குறித்து உள்ளதாக மயிலை சீனி வேங்கடசாமி உரைப்பர்.மத்தவிலாச நாடகத்தில் நகைச்சுவையும், அங்கதமும், நிறைந்துள்ளன. இது காபாலிகம், பாசுபதம் என்ற சைவசமயப் பிரிவுகளையும் புத்த சமயத்தையும் கேலி செய்கிறது. அவர்களை அங்கத முறையில் தாக்குகிறது. மத்தவிலாச நாடகம் ஏழாம் நூற்றாண்டின் காஞ்சிபுரத்தைப் படம்பிடித்துக் காட்டுக்கிறது. ஏகாம்பரநாதர் கோயில் நேரடியாகவே குறிக்கப்படுகிறது. கோவிலின் மத்தள ஓசை, பூக்கடைகள், எழிலுடைய இளமங்கையர் - இவை போன்ற குறிப்புகளும் காணப்படுகின்றன். மகேந்திரவர்மனின் பல பட்டப்பெயர்களும் சுட்டிக்காட்டப்படுகின்றன. சூத்திரகாரி என்பவனால் நாடகம் தொடங்கி வைக்கப்படுகிறது. முன்னுரைக்குப்பின் நாடகம் இயல்பாக இணைக்கப்படுகிறது. சூத்திரகாரி ஆசிரியருடைய புகழைப் பாடியே பழகிவிட்டது என்று சொல்லுகிற உரையாடலின் தொடர்ச்சியாக, நாடகப்பாத்திரமான கபாலி சொல்லுகிற தன்மை மதுவருந்தியே பழகிவிட்டது என்ற உரையாடலில் அமைகிறது.

**மேடை நாடகம்**

தமிழக நாடக மேடைக்குத் தொண்டாற்றிய நாடகப் பெரியோர்கள் பட்டியலில் முதலிடம் பெற்றதக்கவர்கள் திரு.நடேசதீட்சதர் அவர்களால் துவக்கப்பட்ட திரு.கல்யாண ராமையர்

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

நாடகக்குழுவும் தஞ்சைக்கோவிந்தராசு அவர்களால் துவக்கப்பட்ட மனமோகன நாடக கம்பெனி குழுவும் ஆகும். தமிழ்நாடக மேடைக்கு தொண்டு சிறக்க செய்தவர்கள் நால்வர், அவர்கள், சங்கரதாஸ், கெ.பொ.கிருஷ்ணசாமி, பம்பல்சம்பந்தம், சி.கன்னையா, இவர்களில் நாடக மேடைக் கலையின் பிரம்மராகவே சங்கரதாஸ் விளங்குகிறார். பம்பல்சம்பந்தரின் நாடக மேடைத்தொண்டு மறைக்கவோ, மறுக்கவோ முடியாது. எ.கா.மேடைநாடக நினைவுகள் எனும் நூல் மேடைநாடக வளர்ச்சியைக் காட்டும் வரலாற்றுக் களஞ்சியமாகும். இவர்களில் மேடைக்காட்சித்தந்தை" என சி.கன்னையா போற்றப்படுகிறார். திரு.கே.என்.ரத்தினம் அவர்களின் தேவி நாடகச் சபா இன்றைக்கும் இயங்கி வரும் பழைய நாடக மன்றங்களுள் ஒன்றாக திகழ்கிறது.

**குறவஞ்சி நாடகம்**

குன்றக்குரவை வளர்ந்து குறவஞ்சியாக மலர்ந்தது. இலக்கிய நாடகமாக மலர்ச்சி பெற்றது குறி சொல்லுதல் செய்தியை மையத் கருவாக கொண்டு தோன்றியதே குறவஞ்சி நாடகம். இதனைக் குறம் என்றும் குறத்திப்பாட்டு என்றும் பாட்டியல் நூல்கள் குறிப்பிடும். இது மக்களின் மனம் கவர்ந்த நாடகவகை " அகவல்,வெண்பா, கலிப்பா, கலித்துறை, விருத்தம், முதலிய செய்யுட்களோடு சிந்து கீர்த்தனம் முதலிய இசைப்பாட்டுகளும் இந்நாடகத்தில் அமைவதால், ஓசை, நயமிகக், கேட்பவர்களுக்கு இன்பம் பயக்கும்" என்பார் மு.வரதராசனார்.

மீனாட்சியம்மை குறம் முதல் நாடகம் ஆகும். எனினும் திரிகூட ராசப்பக் கவிராயரால் பாடப்பட்ட "திருக்குற்றாலக்குறவஞ்சி" பெரும்பாலும் நடிக்கப்பெற்றது. படித்தவர் பாமரர் என அனைவரும் விரும்பும் வகையில் இந்நாடகம் விளங்கியது. கும்பேசர் குறவஞ்சி நாடகமும் குறிப்பிடத்தக்கது என்பார். உ.வே.சா.குடந்தை பாபநாச முதலியாரால் எழுதப்பட்டது. " தஞ்சாவூர் பிரகதீசுவரார் கோயிலில் மராட்டிய மன்னர்கள் கால முதல் ஒரு குறவஞ்சி நாடகமாவது ஆளப்பட்டு வருகிறது. இக்கோயில் பிரம்மோற்சவத்தில் அஷ்டக்கொடி என்னும் உற்சவ தினத்தன்று கோயில் தாசிகளால் ஆடப்பட்டு வந்ததாகப் பம்மல் சம்பந்தனார் உரைப்பர்.

**மனோன்மணியம் சுந்தரம்பிள்ளையின் நாடகம்**

படிப்பதற்கும் நடிப்பதற்கும் நாடக இலக்கியத்தின் தேவையுணர்ந்து மனோன்மணீய நாடகத்தை பேராசிரியர் சுந்தரம்பிள்ளை எழுதினார். தமிழ் நாடக வரலாற்றில் இந்நூல் ஒரு திருப்புமுனையாக அமைந்தது. லிட்டன் பிரபு எழுதிய "Lost tales of Militus" எனும் தொகுப்பில் உள்ள "The Secretway" என்ற பகுதியைத் தழுவி சேக்ஸ்பியருடைய நாடகங்களின் அமைப்பில் ஐந்து அங்கங்கள் உட்பிரிவான களங்கள் என்ற வடிவில் இந்நாடகம் எழுதப்பட்டது. படிப்பதற்கு ஏற்ற எளிய ஆசிரியப்பா அமைப்பில் தமிழ்நாட்டுக் கதையாகவே தோன்றுகிற வகையில் இந்நாடகம் அமைந்துள்ளது. ஆசிரியருடைய மொழிப்பற்றும், நாட்டுப்பற்றும் இந்நூலில் மிகச்சிறப்பாக வெளிப்படுகிறன. தமிழைத்தெய்வமாக போற்றிய நூல் இதுவாகும்.

"நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்" என்ற தமிழ்த் தெய்வ வணக்கப்பாடல் (பஃறாழிசைக் கொச்சகக் கலிப்பா) தமிழக அரசின் தமிழ்த்தாய் வாழ்த்தாக இசைக்கப்பெற்றுப் போற்றப்படுகிறது. 1970 ஆம் ஆண்டு கலைஞர் ஆட்சியின்போது பொது வாழ்த்திப்பாடலாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. கோல்டுஸ்மித் எழுதிய The Hermit" நூலையும் சைவசித்தாந்த கருத்துக்களின்

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

பிழிவாக அமைந்து சிவகாமிசரிதம் என்ற பகுதியாக உருமாற்றி மனோன்மணீய நாடகத்தில் துணைக்கதையாக இணைத்துள்ளார். மனோன்மணீயம் தமிழில் தோன்றிய ”கவிதை நாடகங்களுக்குத்தாய்” என்று போற்றப்படுகிறது.

கல்வெட்டறிஞர் கோபிநாத்ராவுடன் இணைந்து கல்வெட்டு ஆராய்ச்சி செய்தார். தன்பங்கிற்கு 14 கல்வெட்டுகளை கண்டுபிடித்துக் காட்டினார். திருஞானசம்பந்தம் கால ஆராய்ச்சி, திருதங்கூர் மன்னர்கால ஆராய்ச்சி போன்ற பல ஆராய்ச்சி நூல்கள இயற்றியவராதலால் இவர் திராவிட ஆராய்ச்சித்தந்தை எனப் போற்றப்படுகிறார்.

**சங்கரதாஸ் சுவாமியின் நாடகத் தன்மை**

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் நாடகப் பணிபுரிந்து, தமிழ் நாடகத்தைச் சிறக்கச் செய்த துறவி இவர், தெருக்கூத்துவகை புகழ்பெற்றுத் திகழ்வதைப் பார்த்து அதே பாணியில் நாடங்கங்களை எழுதி மேடையேற்றிப் புகழ்பெற்றார். இவருடைய நாடகங்களில் பாடல்கள் மிகுதியாக இருக்கும். உரைநடைகுறைவாக இருக்கும். இரண்டும் செந்தமிழ் நடையில் இலக்கண பிழையின்றி காணப்படும் அவை புராணக்கதைகளை ஒட்டியவை. நீதிபோதனை மிக்கவை. அவற்றுள் சில

பிரகலாதன், சிறுத்தொண்டர் முதலான பக்தி நாடகங்ளையும், பவளக்கொடி லவகுசா முதலான 40 நாடகங்களை எழுதி மேடையேற்றியுள்ளார். நூற்றுக்கும் மேற்பட்ட பாடல்கள் அடங்கிய அபிமன்யூ” நாடகத்தை ஒரே இரவில் எழுதி முடித்தவர். இவர்காலத்திற்குப் பின்பே இவருடைய சதிசுலோசனா, சதி அனுசுயா, அபிமன்யு சுந்தரி போன்ற சில நூல்கள் மட்டுமே அச்சிடப்படுள்ளன. திருமணமின்றித் துறவு வாழ்க்கை மேற்கொண்டவர். நாடகத்தில் கீர்த்தனைப் பாடல்களை மிகுதியாகப் பயன்படுத்தியவர். சமரசசன்மார்க்க நாடகசபை, பாய்ஸ்கம்பெனி போன்ற நாடகக்குழுக்களை நிறுவியவர். யாழ்ப்பாணம் சென்று நாடகம் நடத்தியவர் நடிகர்களிடையே ஒழுங்கையும் கட்டுப்பாட்டையும் வலியுறுத்தியவர். ”ஞானப்பழத்தைப் பிழிந்து” என்ற புகழ்பெற்ற பாடலை இயற்றியவர் தமிழ்நாடகத் தலைமையாசிரியர் என்று பாராட்டப்பட்டவர்.

**பம்மல் சம்பந்தம் முதலியார் நாடகப் பங்கு**

நாடகத்திற்கு இருந்து வந்த இழிநிலையை மாற்றியமைத்தவர்.1891-ல் சென்னையில் சுகுண விலாச சபாவை ஏற்படுத்தி, தாமே நாடகங்கள் எழுதி தாமும் நடித்து, பல அறிஞர்களையும் நடிக்குமாறும் செய்தவர். முதன்முதல் (1893) அவர் எழுதி நடித்தது ”புஷ்பவள்ளி” என்ற சமூக நாடகம். 90 நாடகங்கள் தாமே கற்பனை செய்து இயற்றினார்.

நாடகம் என்றால் புராணக்கதைகள் தாம் என்றிருந்த நிலையை மாற்றிச் சமூக நடப்புகளையும் நாடகப்பொருளாக்கியுள்ளார். ரத்னாவளி, மனோகரா, கள்வர் தலைவன், வேதாள உலகம், சபாபதி, லீலாவதி சுலோசனா, முதலியன இவரது புகழ்பெற்ற நாடகங்கள். மாக்பெக், விஹாம்லெட், வெனிஸ்வணிகள், சிம்பலின், விரும்பிய விதமே, முதலிய ஷேக்ஸ்பியரின் நாடகங்களைத் தமிழாக்கி மேடையேற்றினார். சாகுந்தலம், மாளவிகாசினி மித்ரம், விக்கிரமோர்வசியம், போன்ற வடமொழி நாடகங்களை தமிழிழ்மொழி பெயர்த்து மேடையேற்றினார்.

இவரது முழுப்பெயர் திருஞானசம்பந்தம் நீதிபதியாக பணியாற்றியவர் சமெச்சூர் சபாக்கள் உருவாக 
வழிகாட்டியவர் உரையாடலில் எழுதிவெற்றிபெற முடியும் என முதன்முதலில்

நிலைநாட்டியவர் இவர் இயற்றிய நாடக நூல்கள் நாடகத்தமிழ், நாடகமேடை நினைவுகள், நடிப்புக்கலையில் தேர்ச்சி பெறுவது எப்படி?, நடிப்புக்கலை, நான்கண்ட நாடகத்கலைஞர்கள் முதலியன சேக்ஸ்பியரின் நாடகங்களை மிகுதியாகத் தமிழில் மொழிபெயர்த்தவர். தத்தளித்து நின்ற தமிழ்நாடகத் தாய்க்குப் புத்துயிர் அளித்த புண்ணியவான் என்று இவரைப் பாராட்டியவர் கவிமணி தேசிய விநாகம்பிள்ளை.

**பரிதிமாற் கலைஞரின் நாடகத் தன்மைகள்**

நாடகம் படைத்தல், நடித்தல், நாடக இலக்கணம் இயற்றல் ஆகிய முக்கோணங்களில் நாடகத்தொண்டு ஆற்றியவர். கிறித்துவக் கல்லூரி தமிழ்துறைத் தலைவராய்ப் பணியாற்றியவர். இவர் இயற்றிய நாடக இலக்கண நூல் நாடகவியல் (1897). படைத்தவை ரூபாவதி, கலாவதி, மானவிஜயம், சூர்பனகை. முத்ரராக்ஷம் எனும் வடமொழி நாட நூலைத் தமிழில் தந்தார். தமிழ், ஆங்கிலம், வடமொழி என மும்மொழியிலும் வல்லவர் இவர். இவரின் மாணவர் மலராமஜயர் "தசரதன் தவறு" எனும் நாடகம் புனைந்தார்.

"செத்தாலும் எந்தன் சாம்பல் தமிழ் மணந்து வேகவேண்டும்" என்று ஒரு கவிஞன் பாடியது போல செத்தாலும் தன் சாம்பல் நாடத்தமிழ் வீசவேண்டும் என்று வாழ்ந்து காட்டியவர்.

**முடிவுரை**

இன்றை சூழலில் கல்விச்சாலைகளில் ஓரங்க நாடகம், நாட்டிய நாடகங்கள், நடித்துக்காட்டப்படுகின்றன். வார, மாத இதழ்களிலும், வானொலி தொலைக்காட்சிகளிலும், நாடகங்கள் நடித்துக் காட்டப்படுகின்றன. இன்று அதிகமான தொலைநுட்பங்களோடு நிறைய படங்கள் வருகின்றன. இவற்றுக்கெல்லாம் முன்னோடியாக அமைந்த மேற்கண்ட நாடகங்களையும், அக்கலை வளர்த்த சான்றோர்களையும், தமிழுலகம் என்றும் மறவாது என்பதை இக்கட்டுரை வாயிலாக அறியலாம்.

**சான்றோன் விளக்கம்**

நாடகத் தமிழ் - பக்-72

மேலது பக் -63

மேலது பக் -79

மேலது பக் -112

**துணை நூற்பட்டியல்**

1. பம்மல் சம்பந்த முதலியார் -நாடக மேடை நினைவுகள் பதிப்பு மார்ச் 2003
2. தி.க.சண்முகம் -எனது நாடக வாழ்க்கை பதிப்பு ஏப்ரல் 2011
3. பேரா.சண்முகதாஸ்-தமிழ் நாடகச் சரித்திரம் பதிப்பு -டிசம்பர் 2008